**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 1 - 2014**

**HIGHER MOTHER TONGUE – TAMIL**

**PRIMARY 6 HMT**

PART 2

பெயர் : ______________ ( ) மதிப்பெண் : ________ / 60

வகுப்பு : P6/ __________ நேரம் : 1 hr 20mins

கட்டளைகள்

1. ஆசிரியர் சொல்லும்வரை தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

MORE TESTPAPERS AVAILABLE FOR DOWNLOAD AT TESTPAPERSFREE.COM

## 'ஆ' பிரிவு

**B4** <u>கருத்தறிதல்</u> **(8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

அது எடிசனின் ஆராய்ச்சிக்கூடம். ஆராய்ச்சிக்கூடம் பார்ப்பதற்குக் கம்பீரமாகத் தோற்றமளித்தது. (Q14) ________________. எடிசன் நேரத்தை மறந்து அல்லும் பகலும் வேலை செய்தார். அதனால் அந்தக் கடிகாரத்தைப் பார்க்கும் பழக்கம் அவரிடம் இல்லை. ஆனால் எடிசனிடம் வேலை செய்த தொழிலாளர்கள் நேரத்தைத் தெரிந்துகொள்வதற்காக ஆராய்ச்சிக்கூடத்தின் நடுவே மாட்டப்பட்ட கடிகாரத்தைப் போய் அடிக்கடிப் பார்ப்பது வழக்கமாக இருந்தது.
(Q15) ________________. அவர்கள் நேரத்தைத் தெரிந்துகொள்ள அடிக்கடிக் கடிகாரத்தைப் பார்ப்பதை அவர் சற்றும் விரும்பவில்லை. அதனால் அவர் அலுவலகத்திலிருந்து வீட்டிற்குப் போகும்போது சிந்தித்துக்கொண்டே சென்றார். (Q16) ________________. மறுநாள் அவர் உதவியாளரை அழைத்துப் பெரிய கடிகாரங்கள் பலவற்றை வாங்கி வரும்படி கூறினார்.
(Q17) ________________. "தொழிலாளர்களே! எங்குப் பார்த்தாலும் கடிகாரங்கள் இருக்கின்றன," என்று எடிசன் கூறினார். ஆனால், ஒவ்வொரு கடிகாரமும் வெவ்வேறு நேரத்தைக் காட்டின. இந்த ஏற்பாட்டுக்குப் பின், தொழிலாளர்கள் கடிகாரம் பார்ப்பதையே நிறுத்திவிட்டார்கள்; அவர்கள் நேரத்தைப் பற்றிய கவலையில்லாமல் வேலையில் ஈடுபட்டார்கள்.

நேரத்தைப்பற்றிய கவலையில்லாமல் வேலையில் ஈடுபட்டதை அவர் விரும்பவில்லை.
எடிசன் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க முடிவு செய்தார்.
விஞ்ஞானி எடிசனுக்கு அவர்களின் செயல் இடையூறாக இருந்தது.
அந்த ஆராய்ச்சிக்கூடத்தின் நடுவே ஒரு கடிகாரம் மாட்டப்பட்டிருந்தது.
அவர் இப்பிரச்சனைக்கு ஒரு நல்ல முடிவு காண எண்ணினார்.
உதவியாளர் ஒரு கடிகாரத்தைத் தேர்ந்தெடுத்து அதிக விலை கொடுத்து வாங்கி வந்தார்.
அந்தக் கடிகாரங்களை ஆராய்ச்சிக்கூடத்தின் சுவர்களில் மாட்டி வைத்தார்.
உடனே ஆராய்ச்சிக்கூடத்தில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தை அங்கிருந்து எடுத்துவிட்டார்.

| வினா எண் | விடை எண் |
|---|---|
| Q14 | ( ) |
| Q15 | ( ) |
| Q16 | ( ) |
| Q17 | ( ) |

A3 <u>வேற்றுமை உருபுகள்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

பல நாள்களாக மழை பெய்யாததால், தெனாலிராமனின் தோட்டத்திலிருந்த செடிகள் வாடிப்போயிருந்தன. தோட்டத்திலுள்ள செடிகளுக்கு (Q10) ______________ (கிணறு) நீரை இறைத்து ஊற்றவேண்டும் என அவன் எண்ணினான். ஆனால், தோட்டவேலை செய்ய ஆள் வைத்தால், (Q11) ______________ (அவர்கள்) சம்பளம் கொடுக்கவேண்டுமே என யோசித்தான். அப்போது அவன் மாமரத்துக்குப் பின்னால் இரண்டு திருடர்கள் ஒளிந்திருப்பதைப் பார்த்தான். அந்த (Q12) ______________ (திருடர்கள்) நன்றாக வேலை வாங்கவேண்டும் என்று தெனாலி நினைத்தான். அவன் (Q13) ______________ (வீடு) உள்ளே இருந்த தன் மனைவியை உரக்க அழைத்து, "மன்னன் எனக்களித்த பொற்காசுகளைக் கிணற்றில்தானே ஒளித்து வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான். அதைக் கேட்ட திருடர்கள் அன்றிரவே அவற்றை எடுக்கக் கிணற்றுநீரை இறைத்தனர். பொழுது விடிந்ததும் தான் தாங்கள் ஏமாற்றப்பட்டதை அவர்கள் உணர்ந்தார்கள்.

A2 <u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இருவாக்கியங்கள் கொடுக்கபபட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6 என் தாத்தா முதுமைக் காலத்திற்காக வங்கியில் பணம் சேமித்து வருகிறார்.

என் தாத்தா வங்கியில் சேமித்து வைக்கும் பணம் ________________________________

________________________________________________________________

Q7 சந்திரனில் பனிப்படலம் இருப்பதை அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

அமெரிக்க ஆய்வாளர்களின் ஆராய்ச்சி ________________________________

________________________________________________________________

Q8 தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய வாசிப்புப் பட்டறையில் அதிகமான பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

அதிகமான பெற்றோர்கள் கலந்துகொண்ட வாசிப்புப் பட்டறை ________________________________

________________________________________________________________

Q9 நூலகத்தில் பல வயதினற்கேற்ற பல்தரப்பட்ட புத்தகங்கள் இருந்தால்தான் வாசகர்கள் அங்குச் செல்ல விரும்புவார்கள்.

வாசகர்கள் தொடர்ந்து நூலகத்திற்குச் செல்ல ________________________________

________________________________________________________________

'அ' பிரிவு

**A1** பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.

பேகன் என்னும் மன்னன் இல்லை என்று சொல்லாது வாரி வழங்கும் வள்ளல். இதனால் அவன் புகழ்ப்பெற்று விளங்கினான். ஒரு சமயம், அவன் தன் படைவீரர்களுடன் இயற்கைக்காட்சிகளைக் காணச் (Q1) சென்றார்கள். இயற்கைக்காட்சிகளைக் (Q2) கண்டு களிப்பில் அவன் அரண்மனைக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். அப்போது மழை பெய்வதற்கு அறிகுறியாக வானம் இருண்டுக்கொண்டிருந்தது. வழியில், கார்மேகங்களைக் கண்ட மயில் ஒன்று தன் (Q3) தோகைகளை விரித்து ஆடிக்கொண்டு நின்றது. அதைக் கண்ட மன்னன் மயில் குளிரால் (Q4) நடுங்கியது என்று எண்ணினான். உடனே தான் அணிந்திருந்த (Q5) விளை உயர்ந்த பொன்னாடையை எடுத்து அதற்குப் போர்த்திவிட்டான். பிராணிகளிடத்திலும் அன்பு கொண்ட மன்னனின் செயலைக் கண்ட அனைவரும் வியந்தனர்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

'இ' பிரிவு

C5 சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.

இவ்வுலகத்தில் பல சான்றோர்கள் வாழ்ந்திருந்தாலும் அன்பின் முகவரியை உலகிற்கு அடையாளம் காட்டி; நேசம், பாசம், கருணை போன்ற பண்புகளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர் அன்னை திரேசாதான். இவர் இன்றும் கோடிக்கணக்கான உள்ளங்களில் வாழ்ந்து வருகிறார்.

தமது பத்தொன்பதாவது வயதில் கொல்கத்தாவுக்கு வந்த அன்னை திரேசா, கொல்கத்தாவின் நெருக்கமான தெருக்களில் மிக மோசமான நிலையில் மக்கள் வாழ்ந்ததைக் கண்டு மனம் கலங்கினார். ஆதரவின்றி மாண்டோரின் அவலமும் அவரின் மனத்தை வருத்தியது. அவர் ஆதரவற்றோரின் வாழ்க்கையை மாற்றி அமைக்கவும் தீராத நோய்களினால் துன்பப்படும் நோயாளிகளுக்கு உதவிகள் செய்யவும் எண்ணினார். கடுமையான வறுமையில் வாடிய ஏழைகளுக்கு உதவ ஓர் அறப்பணியைத் தொடங்கினார்.

அன்னை திரேசா 1952-இல் ஆதரவற்றோர்களுக்காகக் கருணையில்லம் ஒன்றைத் திறந்தார். கொல்கத்தாவின் தெருக்களில் உயிர் ஊசலாடிய நிலையில் காப்பாற்றப்பட்ட பெரியவர்களும் சிறுவர்களும் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டனர். தெருக்களில் அனாதைகளைப்போல் கிடந்த இவர்களுக்குக் கருணை இல்லம் அமைதியைத் தந்தது.

அன்பே வடிவான அன்னை திரேசாவும் வாழ்க்கையில் பல அவமானங்களைச் சந்தித்துள்ளார். ஒருமுறை ஏழைகளுக்காக அன்னை, செல்வந்தர் ஒருவரிடம் பணம் கேட்டுக் கையேந்தி நின்றபோது செல்வந்தர் அன்னையின் கையில் எச்சில் உமிழ்ந்தார். அப்போது அன்னை திரேசா என்ன செய்தார் தெரியுமா? சற்றும் முகம் சுளிக்காமல் கையில் விழுந்த எச்சிலைக் கைகுள்ளேயே மூடிக்கொண்டு, "இந்த எச்சில் எனக்குப் போதும், இப்போது ஏழைகளுக்கு ஏதாவது கொடுங்கள்," என்றார். அன்னையின் செயலைக் கண்டு திக்குமுக்காடிய செல்வந்தர் அவரது காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்.

அன்னை திரேசா கருணை இல்லத்தைத் தொடங்கியதோடு தனது பணியை நிறுத்தவில்லை. அனாதை இல்லத்தையும் தொழுநோயாளிகளுக்கான(leprosy) இல்லத்தையும் தொடங்கி தம் பணியை விரிவுப்படுத்தினார். தொடக்கத்தில் இந்தியாவில் மட்டும் செயல்பட்ட இல்லங்கள், அன்னையின் முயற்சியினால் 500க்கும் மேற்பட்ட நிலையங்களாக விரிவடைந்து தற்போது பல நாடுகளில் சேவையாற்றி வருகின்றன. தம் பணிக்கு விளம்பரம் தேடாத அன்னை தெராசாவை நோக்கிப் பல விருதுகள் வந்து குவிந்தன. அமைதிக்கான நோபல் பரிசு, இந்தியாவின் பார்த் ரத்னா விருது, அமெரிக்க அதிபரின் சுதந்திரப் பதக்க விருது போன்றவை அன்னையைக் கௌரவித்தன.

வினாக்கள்

Q18. அன்னை திரேசா மக்கள் உள்ளங்களில் வாழ்வதற்கு என்ன காரணம்? (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q19. கொல்கத்தாவில் எவை அன்னை திரேசாவின் மனதை உருக்கின? (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q20. அன்னை திரேசா எதற்காக அறப்பணியை ஆரம்பித்தார்?(4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q21. அன்னை திரேசா மன்னிக்கும் குணமுடையவர் என்பதை நாம் எதிலிருந்து அறியலாம்? (5)

Q22. அன்னை அறப்பணிசி சேவை உலகெங்கும் விரிவானதை நாம் எவ்வாறு தெரிந்துகொள்ளலாம்? (4)

Q23. அன்னை திரேசா எவ்வாறு கௌரவிக்கப்பட்டார்? (3)

Q24. பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. திகழ்ந்தவர் - ____________________ (2)

ஆ. வறுமையில் - ____________________ (2)

# P6 HMT
# TESTPAPER 7

<u>பேகன் என்னும் மன்னன்..........</u>

1. சென்றான் 2. கண்ட 3. தோகையை 4. நடுங்குகிறது 5. விலை

6. முதுமை காலத்திற்காகவே ஆகும்.

7. சந்திரனில் பனிப்படலம் இருப்பதைக் கண்டது.

8. தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் நடத்தப்பட்டது.

9. நூலகத்தில் பல வயதினற்கேற்ற பலதரப்பட்ட புத்தகங்கள் இருக்க வேண்டும்.

10. கிணற்றிலிருந்து 11. அவர்களுக்கு 12. திருடர்களிடம் 13. வீட்டின்

14. 4 15. 5 16. 3 17. 7

18. அன்பின் முகவரியை உலகிற்கு அடையாளம் காட்டி, நேசம், பாசம், கருணை போன்ற பண்புகளுக்கு அன்னை திரேசா திகழ்ந்ததால், அன்னை திரேசா மக்களின் உள்ளங்களில் வாழ்கிறார்.

19. கொல்கத்தாவின் நெருக்கமான தெருக்களிலுள்ள மிக மோசமான நிலை, ஆதரவின்றி மாண்டோரின் அவலம், ஆதரவற்றோரின் வாழ்க்கை, தீராத நோய்களினால் துன்பப்படும் நோயாளிகள் ஆகியோரின் நிலை அன்னை திரேசாவின் மனதை உருக்கின.

20. ஆதரவற்றோரின் வாழ்க்கையை மாற்றி அமைக்கவும், தீராத நோய்களினால் துன்பபபடும் நோயாளிகளுக்கு உதவி செய்யவும், கடுமையான வறுமையில் வாடிய ஏழைகளுக்கு உதவவும் அன்னை திரேசா அறப்பணியை ஆரம்பித்தார்.

21. அன்பின் வடிவமான அன்னை திரேசா வாழ்க்கையில் பல அவமானங்களைச் சந்தித்துள்ளார். ஏழைகளுக்காக செல்வந்தர் ஒருவரிடம் பணம் கேட்டுக் கையேந்தியபோது அவர் அன்னையின் கையில் எச்சில் உமிழ்ந்தார். இதனால் கோபம் கொண்டு முகம் சுளிக்காமல் அன்னை திரேசா அந்த எச்சில் தனக்குப் போதுமென்றும் ஏழைகளுக்கு ஏதாவது கொடுங்கள் என்று செல்வந்தரிடம் அமைதியாகக் கூறி அவரை மன்னித்ததிலிருந்து அவர் மன்னிக்கும் குணமுடையவர் என்பதை நாம் அறியலாம்.

22. அன்னை திரேசாவின் கருணை இல்லம், அனாதை இல்லங்கள் மற்றும் தொழுநோயாளிகளுக்கான இல்லங்கள் இவை யாவும் ஆரம்பத்தில் இந்தியாவில் மட்டும் செயல்பட்டன .ஆனால் அன்னையின் முயற்சியால் 500க்கும் மேற்பட்ட நிலையங்களாக விரிவடைந்து தற்போது பல நாடுகளில் செயல்படுவதிலிருந்து அவரின் அறப்பணிச் சேவை உலகெங்கும் விரிவானதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

23. அமைதிக்கான நோபல் பரிசு, இந்தியாவின் பாரத ரத்னா விருது, அமெரிக்க அதிபரின் சுதந்திர பதக்க விருது போன்றவற்றால் அன்னை திரேசா கௌரவிக்கப்பட்டார்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. விளங்கியவர்
ஆ. ஏழ்மையில்